# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 22 செவ்வாய்க்கிழமை 08.10.2024 கதிர் 381



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

யாழ் முற்றம்

Yarl Muttram

Youtube Channel




# ஜெனீவா தீர்மானம் நீடிக்கப்படுவதை இலங்கை அரசு தொடர்ந்து எதிர்க்கும்

## அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வில் சமர்ப்பிக்கப்படும் எந்த தீர்மானத்தின் 51/1 நகல் வடிவையும் இலங்கை தொடர்ந்து எதிர்க்கும் என அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். நாளைய தினம் ஜெனீவாவில் இலங்கையின் நிலைப்பாடு தெரியப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள் குறித்த ஆதாரங்களை சேகரிக்கும் வெளிப்புற பொறிமுறைக்கான அதிகாரங்களை நீடிக்கும் எந்த தீர்மானத்தையும் இலங்கை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

6➤





## யாழ். வந்த தேர்தல் ஆணையாளர்

தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, யாழ்ப்பாணம் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ம.பிரதீபனை இன்று செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலில் தற்போதைய வேட்புமனு கையேற்றல் தொடர்பாகவும், எதிர்வரும் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் பற்றியும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

தேர்தல்கள் திணைக்கத்தின் பிரதி ஆணையாளார் எஸ். அச்சுதனும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

## காணாமல்போன பக்கங்கள்! விசாரணைகள் ஆரம்பம்

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசேட ஜனாதிபதி ஆணைக குழுவின் அறிக்கையின் பக்கங்கள் காணாமல் போனதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் அரசாங்கம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் இன்று புதன்கிழமை தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த மாநாட்டில் அவர் கூறுகையில், விசாரணைகளின் முடிவுகள் விரைவில் வெளியாகும். அந்த பக்கங்கள் எவ்வாறு காணாமல் போயின என்பதும், ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் அனைத்து பக்கங்களும் அப்படியே உள்ளதா என்பதும் விசாரணைகளின் மூலம் கண்டறியப்படும் என்றார்.

## சீன இராணுவத்தின் பயிற்சிக் கப்பல் மாத இறுதியில் இலங்கை வருகிறது

இலங்கை அனைத்து நாடுகளுடனும் சமமான இராஜதந்திர உறவை பேணும் எந்த நாட்டிற்கும் விசேட சலுகையையோ முக்கியத்துவத்தையோ வழங்காது என வெளிவிவகார அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான விஜித ஹேரத் தெரிவிததுள்ளார்.

இந்தியாவுடன் எப்படி ஈடுபாட்டை பேணுகின்றோமோ அதுபோலவே சீனாவுடன் ஈடுபாட்டை கொண்டுள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மாத இறுதியில் சீன இராணுவத்தின் பயிற்சி கப்பலை இலங்கைக்குள் அனுமதிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளமைகைகான நோக்கம் குறித்து கருத்து தெரி வித்துள்ள விஜித ஹேரத் இது நாட்டின் இராஜதந்திர ஈடுபாட்டின் கட்டமைப்பை மீறாத விடயம் என குறிப்பிட்டுள்ளார்.

இந்த கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு இந்த மாதம் வந்துசேரும் என அவர் தெரி வித்துள்ளார்.

நாங்கள் எந்த நாடும் விசேடமானது என கருதவில்லை, பெரிய நாடாகயிருந்தாலும் சரி சிறிய நாடாகயிருந்தாலும் சரி அவற்றுடன் இலங்கை இராஜதந்திர உறவுகளை பேணுகின்றது,எங்கள் அணுகுமுறையில் பக்கச்சார்பு இருக்காது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வழமையான இராஜதந்திர பரிமாற்றங்களின் ஒரு பகுதியாக பல நாடுகளின் போர்க்கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்றுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.



## மனோ அணியில் பாரத் அருள்சாமி

கண்டி மாவட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் சட்டதரணி பாரத் அருள்சாமி போட்டியிடுகின்றார் என கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இன்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியாலளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பரத் அருள்சாமி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பதவிகளில் இருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்ட தமிழ் கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சி தோல்வி!

## தமிழரசு தனிவழி சங்கு ஓரணியில்!

( வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் கட்சிகளை ஒருங்கிணைக்கும் தொடர் முயற்சி தோல்வியில் முடிந்தது. இலங்கை தமிழரசுக் கட்சி தனிவழி செல்லும் தீர்மானத்தினால் சிவில் அமைப்பினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுக்கட்டமைப்பாக செயற்பட்ட அமைப்புக்களில் ஒன்றான சிவில் அமைப்பு அம்பாறை மாவட்டத்தில் இந்த முயற்சியை தொடர்ச்சியாக முன்னெடுத்திருந்தமை தெரிந்ததே.



இதில் தமிழரசுக்கட்சி, ஈரோஸ் ஜனநாயகக் முன்னணி, ரெலோ, புளோட், ஈ பி ஆர் எல். எப்.. ஜனநாயக போராளிகள் கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளுடன் தொடர்ச்சியாக பேசி வந்தனர்.

இதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி சேர்ந்து பயணிக்க முடியாது .தமது கட்சி சின்னத்தை விட்டு கொடுக்க முடியாது என ஆரம்பத்தில் தெரிவித்து விலகியிருந்தனர். தொடர்ச்சியாக எனைய ஆறு கட்சிகளுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்தன.



கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகளை பொது கட்டமைப்பின் மத்திய குழு உறுப்பினரும் குடிசார் அமைப்பு , தமிழ் மக்கள் பொதுச்சபை ஆகியவற்றின் அம்பாறை மாவட்ட இணைப்பாளருமான இ.விக்னேஸ்வரன் , அம்பாறை மாவட்ட சிவில் அமைப்பு தலைவருமான கண. வரதராஜன் ஆகியோர் முன்னெடுத்து வந்திருந்தனர்.

இந்த தொடர் முயற்சியின் இறுதிக்கட்ட சந்திப்பு நேற்று மாலை காரைதீவு பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் பங்குபற்றிய ஆறு கட்சிகளும் தமது நிலைப்பாட்டை இறுதியாக தெரிவித்திருந்தனர்.

குடிசார் அமைப்பின் அம்பாறை இணைப்பாளர் இ.விக்னேஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

“அம்பாறை மாவட்டத்தில் தமிழ் கட்சிகள் பிரிந்து போட்டியிடுவதால் தமிழ் ஆசனம் இழக்கப்படும் அபாயத்தை கருத்தில் கொண்டு மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப முதற்கட்டமாக தமிழ் தேசிய கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகளை தொடர்ச்சியாக முன்னெடுத்திருந்தோம். கட்சிகளின் தலைமை மற்றும் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களின் கட்சி பிரமுகர்களுடன் பேசியதன் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பும் தமிழரசுக்கட்சியும் வீட்டு சின்னத்தில் போட்டியிட இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதே வேளை அம்பாறை மாவட்டத்தில் சங்கு சின்னத்தில் தமிழரசுக்கட்சியையும் இணைத்து சங்கு சின்னத்தில் போட்டியிட ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு கோரிக்கை விடுத்திருந்தது. நேற்று இடம் பெற்ற கலந்துரையாடலிலும் இணக்கம் ஏற்படவில்லை.

இருக்கும் இரண்டு நாட்களுக்குள் அம்பாறை தமிழ் மக்களின் நிலைமையை கருத்தில் கொண்டு தங்கள் முடிவுகளில் மாற்றம் வந்தால் நன்று வரும் என நம்புகிறோம் பொது அமைப்பாக முடிந்தவரை முயற்சி செய்துள்ளோம்” என்றார்.

இலங்கை தமிழரசுக் கட்சி அம்பாறை பிரதிநிதிகளான க.ஜெயசிறில் அ.நிதான்சன் ஆகியோர் அங்கு கருத்து கூறுகையில்,

தமிழரசுக் கட்சி வீட்டுச் சின்னத்தில் அம்பாறையில் போட்டியிடுவது எங்களின் முடிவு எனவும், இந்த சின்னத்தின் கீழ் ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகளை இணைத்து போட்டியிட தயார். ஆனால் தமது கட்சி சின்னத்தை விட்டுக் கொடுக்க முடியாது. சங்கு சின்னம் ஆரம்பத்தில் பொது கட்டமைப்பின் கீழ் பொதுவாக இருந்தாலும், அது தற்போது குறிப்பிட்ட கட்சிகளால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால் சங்கு சின்னத்தில் போட்டியிட முடியாது என தெரிவித்து வீட்டு சின்னத்தில் தனித்து போட்டியிடுவதாக தெரிவித்தனர்.

ஏனைய ஐந்து கட்சிகளின் பிரதிநிதிகளான ரெலோ ஹென்றி மகேந்திரன், ஈரோஸ் இராஜேந்திரா, புளட் சங்கரி ,ஈபிஆர்எல்எவ் புண்ணியநாதன், ஜனநாயக போராளிகள் சுமி ஆகியோர் கருத்து கூறுகையில்,

தாங்கள் முடிந்தவரை விட்டுக்கொடுப்பை செய்துள்ளோம். அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தமிழ் பிரதிநிதித்துவம் இழக்கக் கூடாது என்பதற்காக விட்டுக் கொடுப்புடன் பொறுமையாக செயற்பட்டுள்ளோம். திருகோணமலையில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட இணங்கினோம். அம்பாறையில் சங்கு சின்னத்தில் போட்டியிட நாங்கள் ஐந்து கட்சிகள் தயார் தமிழரசு க்கட்சியை அழைத்திருந்தோம். நேற்று வரை நல்ல முடிவுக்காக காத்திருந்தோம். தமிழ் அரசுக் கட்சி தமது வீட்டுச் சின்னத்தில்தான் அம்பாறையில் போட்டியிட வேண்டும் என்று எங்களை அழைத்தார்கள். இது ஏற்றுகொள்ள முடியாது . நாங்கள் விட்டுக்கொடுப்புடன் செயற்பட்டும் அவர்கள் விட்டுக்கொடுப்புடன் செயற்பட வில்லை. நாங்கள் ஐந்து கட்சிகள் ஒன்றிணைந்துள்ளோம். ஆகவே இனி நாங்கள் எங்கள் நிலைப்பாட்டை எடுத்துள்ளோம் சங்கு சின்னத்தில் போட்டியிடவுள்ளோம். மக்கள் வாக்குகளால் உங்கள் முடிவை வழங்குங்கள்” என்றனர்.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான வாய்ப்பை பெண்களுக்கு வழங்குங்கள்

## அரசியல் கட்சிகளிடம் கஃபே அமைப்பு கோரிக்கை

(ஹஸ்பர் ஏ.எச்.)

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பை பெண்களுக்கு வழங்குமாறு அனைத்து அரசியல் கட்சிகளிடமும் சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கஃபே) அமைப்பு கேட்டுக்கொள்கிறது. பல ஆண்டுகளாக அரசியலில் ஈடுபட்டு வரும் மூத்த அரசியல்வாதிகள் இந்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என முடிவு செய்துள்ளனர். எனவே, ஒவ்வொரு அரசியல் கட்சியிலிருந்தும் வேட்புமனுக்களை கையளிக்கும் போது பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு கணிசமான இடத்தை வழங்குமாறு அனைத்து அரசியல் கட்சிகளிடமும் கஃபே அமைப்பு கோரிக்கை விடுகின்றது.




கடந்த காலங்களில் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட சிலர் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் தமது கடமையை சரியாக செய்யவில்லை என்பதை அவதானித்துள்ளோம். மேலும் மக்கள் அந்தந்த கட்சியால் வேட்புமனுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு மக்கள் தங்கள் விருப்பத்தை தெரிவிக்கின்றனர்.

எனவே, அனைத்து அரசியல் கட்சிகளும் தமது கட்சி பிரதிநிதிகளை தெரிவு செய்யும் போது பொதுமக்களால் குற்றம் சுமத்தப்பட்டவர்களை தெரிவு செய்யாமல் இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் கணிசமான வாய்ப்பை வழங்குவதற்கு முன்வர வேண்டுமென கபே அமைப்பின் நிர்வாக பணிப்பாளர் திருமதி சுரங்கி ஆரியவன்ச கேட்டுக்கொள்கிறார். ஊடகங்களுக்கு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

"இந்நாட்டில் பெரும்பான்மையான வாக்காளர்கள் பெண்களாகவே காணப்படுகின்றனர். அந்த வகையில் குறிப்பாக அவ்வீதம் நீண்டகாலமாக 50மூ முதல் 52மூ வரையில் காணப்படுகிறது. ஆனால், இந்நாட்டு வரலாற்றில் பெண்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் 6மூ வீதத்தினை விட அதிகரிக்காமல் இருப்பது வருத்தமளிக்கிறது.

இதன் காரணமாக ஜனநாயகத்தை மதிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் இம்முறை பாராளுமன்றத்தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென கஃபே அமைப்பு கேட்டுக்கொள்கின்றது."

# தாமரைக் கோபுரத்திலிருந்து விழுந்து உயிரிழந்த மாணவி


## பொலிஸாருக்கு தந்தை வழங்கிய வாக்குமூலம்

கொழும்பு தாமரைக் கோபுரத்திலிருந்து நேற்று வீழ்ந்து உயிரிழந்த மாணவியும், கொம்பனித் தெருவில் உள்ள தொடர்மாடிக் குடியிருப்பு தொகுதியிலிருந்து அண்மையில் வீழ்ந்து உயிரிழந்த இரண்டு மாணவர்களும் நண்பர்கள் என தெரியவந்துள்ளது.

உயிரிழந்த மூவரும் ஒரே சர்வதேச பாடசாலையைச் சேர்ந்தவர்கள் என காவல்துறை தெரிவித்துள்ளது.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் கொம்பனித் தெருவில் உள்ள தொடர்மாடிக் குடியிருப்பு தொகுதியிலிருந்து சர்வதேச பாடசாலை ஒன்றில் பயிலும் 15 வயதுடைய மாணவி ஒருவரும், மாணவர் ஒருவரும் வீழ்ந்து உயிரிழந்தனர்.

அவர்களது உயிரிழப்புக்குப் பின்னர், தமது மகள் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகியிருந்ததாக



நேற்றைய தினம் தாமரைக் கோபுரத்திலிருந்து வீழ்ந்து உயிரிழந்த மாணவியின் தந்தை, வாக்குமூலம் வழங்கியுள்ளதாக காவல்துறை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், குறித்த மாணவி உயிரிழப்பதற்கான காரணம் இன்னும் தெரியவரவில்லை.




# எம்.பி.க்களின் முத்திரை இடை நிறுத்தப்பட்டது

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அனைத்து முத்திரைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வழங்கப்பட்டுள்ள அனைத்து முத்திரைகளையும் பாராளுமன்ற தபால் அலுவலகத்திடம் ஒப்படைக்குமாறு தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்காக வருடத்திற்கு 10,000 முத்திரைகள் வழங்கப்படுவதுடன் இவற்றிற்காக 500,000 ரூபா செலவிடப்படுவதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# திறைசேரி முறிகள் ஏலத்தில்விட முடிவு


மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி முறிகளை நாளை(09) ஏலத்தில் விடுவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இதற்கான விலைமனுக்களை நாளை முற்பகல் 11 மணி வரை சமர்ப்பிக்க முடியும்.

திறைசேரி முறிகளுக்கான கொடுப்பனவுகளை எதிர்வரும் வெள்ளிக்கிழமை செலுத்த வேண்டுமெனவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# அநுரகுமாரவும் இந்தியாவும் எதிர்பார்ப்பும் யதார்த்தமும்

**ஜனாதிபதியாக அநுர வருவதை இந்தியா விரும்பியிருக்கவில்லை என்பது இரகசியமானதல்ல. இந்தியா யாரை விரும்பியது என்பதும் அதற்காக அவர்கள் முன்னெடுத்த முயற்சிகளும் கூட அனைவருக்கும் தெரியும். டில்லி இப்போது அவசரம் அவசரமாக காய்களை நகர்த்துவது அநுரவை எவ்வாறாயினும் தமது பிடிக்குள் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்!**



**அகிலன்**

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசநாயக்க இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட போது அரசியல் ஆய்வாளர்கள், இராஜதந்திரிகள் மத்தியில் எழுந்த பிரதான கேள்வி, இந்தியாவை இவர் எவ்வாறு கையாளப் போகின்றார் என்பதுதான். இந்தக் கேள்வி எழுந்தமைக்குப் பல காரணங்கள் இருந்தன. அது ஜே.வி.பி.யின் கடந்த கால வரலாற்றுடன் தொடர்புபட்டது.

இலங்கையைப் பொறுத்தவரையில் இந்தியாவைக் கையாள்வது என்பது முக்கியமானது. மறுபுறத்தில் இந்தியாவுக்கும் இலங்கை முக்கியமானது. ஏதோ ஒருவகையில், இலங்கை தன்னுடைய ஆளுகைக்குள் இருக்க வேண்டும் என்பதில் அக்கறைகாட்டும் ஒரு நாடாகவே இந்தியா உள்ளது. “அண்டை நாடுகளுக்கு முதலிடம்” என்று இந்தியா பெருமையுடன் சொல்லிக்கொள்ளும் அதனுடைய வெளியுறவுக் கொள்கையின் உள்ளார்ந்தமும் அதுதான்!

இந்தப் பின்னணியில்தான் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் சில மணிநேர விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு வந்தார். நண்பகல் கொழும்பு வந்திறங்கிய ஜெய்சங்கர் ஆறு சந்திப்புக்களை அவசரமாக நடத்திவிட்டு இரவே புதுடில்லி திரும்பிவிட்டார். தமிழ்க் கட்சிகளையும் அவர் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அவரது அவசரமான நிகழ்ச்சி நிரலில் தமிழ்க் கட்சிகளைச் சந்திப்பதற்கு நேரம் இருக்கவில்லை. அல்லது – தேவை இருக்கவில்லை என்றும் சொல்லலாம்.

தேசிய மக்கள் சக்தி என்பது ஜே.வி.பி.யின் மற்றொரு வடிவம்தான். ஜே.வி.பி.யில் அரசியல் படித்தவர்தான் அநுரகுமார. இப்போது அவர்கள் அதிகாரத்துக்கு வந்திருப்பதையிட்டு புதுடில்லி பதற்றமடைவதற்கு பல காரணங்கள் உள்ளன. ஜே.வி.பி.யின் ஸ்தாபகர் றோஹண விஜயவீர இலங்கை சீன சார்பு கம்யுனீஸ்ட் கட்சியிலிருந்துதான் அரசியலுக்கு வந்தவர். ஜே.வி.பி.யின் வளர்ச்சியில் சீனாவின் ஆதரவு இருந்துள்ளமை இரகசியமானதல்ல.

ராஜபக்ஷக்களின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவுக்கு கொழும்பு துறைமுகத்தின் தெற்கு முனையத்தை கொடுக்க முற்பட்ட போது கிளர்நதெழுந்து, அதனைத் தடுத்து நிறுத்திய ஜே.வி.பி.யும் அதன் ஆதரவுடன் செயற்படும் தொழிற்சங்கங்களும், கொழும்பு முறைமுக நகரத்தையும், அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் சீனாவுக்கு கொடுத்தபோது மௌனமாக இருந்தன. ஆக, ஜே.வி.பி. என்பது சீனாவுக்கு சார்பான ஒரு அமைப்பாகவே அடையாளம் காணப்பட்டிருந்தது.

இந்தியாவுக்கு சூழவுள்ள நாடுகள் அனைத்தும் சீனாவின் செல்வாக்குக்கு உட்பட்டவையாக மாற்றமடைந்துவரும் நிலையில், இலங்கையும் அவ்வாறு சென்றுவிடுமா என்பது இந்தியாவின் பதற்றத்துக்கு முதலாவது காரணம். இந்தியாவைப் பொறுத்தவரையில் அதன் தென்முனையத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடத்தில் இலங்கை அமைந்திருக்கின்றது. ஏற்கனவே, கொழும்பு துறைமுக நகரம், அம்பாந்தோட்டை துறைமுகம் என்பன சீனாவால் குத்தகைக்கு எடுக்கப்பட்டவையாக உள்ள நிலையில், சீன ஆதரவு ஆட்சி ஒன்று இலங்கையில் உருவாகுவது புதுடில்லியைக் குழப்பும் என்பது எதிர்பார்க்கக்கூடியதுதான்.

ஜே.வி.பி.யின் வரலாற்றைப் படிக்கும் போது இன்னும் இரண்டு விடயங்கள் இந்தியாவுக்கு நெருடலாக இருக்கும். 1971 இல் இலங்கையின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான முதலாவது கிளர்ச்சியை ஜே.வி.பி. மேற்கொண்டது. இதற்காக இரகசியமாக ஆட்சேர்ப்பை அவர்கள் மேற்கொண்ட போது, கிளர்சியாளர்களை அரசியல் மயப்படுத்துவதற்கான ஐந்து வகுப்புக்களை அவர்கள் நடத்தினார்கள். அதில் ஒரு பகுப்பு “இந்திய ஆக்கிரமிப்பு” என்ற தலைப்பில் இடம்பெற்றது. ஜே.வி.பி.யின் இந்திய எதிர்ப்பு அதிலிருந்துதான் ஆரம்பமாகின்றது.

1983 ஜூலை தமிழனப் படுகொலைகளைத் தொடர்ந்து ஜே.வி.பி. தடை செய்யப்பட்டது. அதன்பின்னர் இரகசியமாகச் செயற்பட்டுவந்த ஜே.வி.பி.யினர், 1987 இல் இந்தியப் படை இலங்கைக்கு வந்த காலத்தில் தமது இரண்டாது கிளர்ச்சியை நடத்தினார்கள். திருமலையில், இந்தியப் படையினர் மீது கூட அவர்கள் மறைந்திருந்து தாக்குதலை நடத்தியதாக தகவல்கள் உள்ளன. அவர்களுடைய இந்த இரண்டாவது கிளர்ச்சியின் போதும் இந்திய எதிர்பு என்பதுதான் பிரதானமாக முன்னிறுத்தப்பட்டது.

ஆக, ஜே.வி.பி.க்கு இரண்டு அடையாளங்கள் உள்ளன. ஒன்று சீன சார்ப்பு. இரண்டு இந்திய எதர்ப்பு!

அநுரகுமார திசநாயக்கவைப் பொறுத்தவரையில் இந்தக் கிளர்ச்சிகளில் அவர் நேரடியாகச் சம்பந்தப்பட்டவரல்ல. ஆனால், அநுரகுமாரவை பின்னின்று இயக்கும் ரில்வின் சில்வா போன்ற சிலர் ஜே.வி.பி.யின் பழைய வரலாற்றுடன் தொடர்புபட்டவர்கள். அதேவேளை, ஜே.வி.பி.யும், தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் இப்போது செயற்பட்டுவருகின்றது. அதனால், அவர்கள் தமது அடிப்படைக் கொள்கைகளில் இருந்து மாறிவிட்டார்களா என்பதை இப்போதே சொல்லிவிட முடியாது.

இந்தியாவின் பதற்றத்துக்கு இவைதான் காரணம். இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற அரகலய என்று சிங்கள மக்களின் கிளர்சியைப் பயன்படுத்தி ஜே.வி.பி. தமது ஆதரவுத் தளத்தை அதிகரித்துக்கொண்டுள்ளது என்பதை புதுடில்லி கடந்த வருடமே அடையாளம்கண்டிருந்தது. இலங்கை அரசியலில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய ஒரு சக்தியாக ஜே.வி.பி. வளர்சியடைந்திருந்த நிலையில்தான் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களையும் ரணில் விக்கிரமசிங்க ஒத்திவைத்தார்.

கடந்த பெப்ரவரியில் அநுர தலைமையிலான ஒரு குழுவினரை இந்தியா அழைத்திருந்தது இந்தப் பின்னணியில்தான். இந்த அழைப்பின் பின்னணியில் இரண்டு – மூன்று நோக்கங்கள் இருந்தன. முதலாவது ஜே.வி.பி. தலைமையுடன் நல்லுறவை ஏற்படுத்துவது. இரண்டாவது இந்தியா தொடர்பான அவர்களுடைய அணுகுமுறை எவ்வாறுள்ளது என்பதை நாடி பிடித்துப் பார்ப்பது. மூன்றாவது இந்தியாவின் முக்கியத்துவத்தை ஜே.வி.பி. தலைமைக்கு உணர்த்துவது.

ஜே.வி.பி.யைப் பொறுத்தவரையில் இந்தியாவால் கொடுக்கப்பட்ட இந்த அங்கீகாரத்தை உள்நாட்டில் தமது செல்வாக்கை மேலும் அதிகரிப்பதற்கு அவர்கள் பயன்படுத்திக்கொண்டார்கள். அதிகாரத்தைப் பெறப்போகும் ஒரு கட்சிக்கு இது தேவையானதாகவும் இருந்தது. சர்வதேச உறவுகளையும் கையாளக்கூடிய ஒருவர்தான் அநுர என்ற பிம்பத்தை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்த அந்த விஜயம் அவர்களுக்கு உதவியது.

ஜனாதிபதியாக அநுர தெரிவாகிய உடனடியாக அவரைச் சந்தித்த கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், இந்தியாவுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு ஒன்றையும் விடுத்தார். இப்போது இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரும் அநுரவைச் சந்தித்து டில்லி வருமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விடுத்த அழைப்பை கையளித்திருக்கின்றார். அநுரவைச் சந்தித்த முதலாவது வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்தான். அதேபோல, அநுர மேற்கொள்ளப்போகும் முதலாவது விஜயமும் இந்தியாவுக்கானதுதான்.

ஜனாதிபதியாக அநுர வருவதை இந்தியா விரும்பியிருக்கவில்லை என்பது இரகசியமானதல்ல. இந்தியா யாரை விரும்பியது என்பதும் அதற்காக அவர்கள் முன்னெடுத்த முயற்சிகளும் கூட அனைவருக்கும் தெரியும்.

புதுடில்லி இப்போது அவசரம் அவசரமாக காய்களை நகர்த்துவது அநுரவை எவ்வாறாயினும் தமது பிடிக்குள் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்!

இலங்கையின் பொருளாதாரத்துக்கு இந்தியாவின் பங்களிப்பு முக்கியமானது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிப் பதவியைப் பெற்ற போது, அவரைப் பாதுகாத்தது இந்தியாவின் பொருளாதார உதவிகள்தான். சீனாவைப் பொறுத்தவரையில் அதன் நிபந்தனைகள் கடுமையானதாகவும், கடன் தொகை குறைவானதாகவும் இருக்கும். ஆனால், இந்தியாவின் உதவிகள்தான் இலங்கை நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உடனடியாக உதவியது.

அநுரப் பொறுத்தவரையிலும் பொருளாதாரத்தை ஸ்திரமாகப் பேணுவதும், நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்வதும்தான் உடனடித் தேவை. பொருளாதார ஸ்திரப்பாட்டைப் பேணுவதற்கும், அதனை மேலும் மேம்படுத்துவதற்கும் இந்தியாவின் ஆதரவு அவசியம் என்பதை அநுர உணர்கின்றார். இந்தியாவை முன்னிலைப்படுத்துவதன் மூலமாகவே அதனை மட்டுமன்றி, அரசியல் ஸ்திரப்பாட்டையும் பேணமுடியும் என்பதும் அவருக்குத் தெரியும். அதனைவிட, சர்வதேச அரங்கில் வரக்கூடிய நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு புதுடில்லியுடனான உறவுகளை சுமூகமாகப் பேணுவது அவசியம் என்பதையும் அவர் புரிந்துகொண்டுள்ளார்.

கடந்த கால வரலாறுகள் எவ்வாறு இருந்தாலும், அதனை மாற்றிக்கொள்ள வேண்டிய தேவை ஏற்படும் போது அதனைச் செய்யத்தான் வேண்டியிருக்கும். “மாற்றம்தான் மாறாதது” என்பது உண்மை. எதிர்ப்பு அரசியலைச் செய்யும் போது சொல்வதை ஆட்சிக்கு வந்த பின்னர் செய்ய முடியாது என்பதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் கடந்த இரண்டு நாட்களாக அநுர நடத்திய பேச்சுக்களே ஆதாரமாக இருக்கின்றது. ஆக, இந்தியாவுடனான அவரது கடந்தகால அணுகுமுறைகளையும் மாற்றிக்கொள்வது அவரைப் பொறுத்தவரை தவர்க்க முடியாததுதான்.

# சர்வதேசப் பார்வை தினத்தை முன்னிட்டு 2,000 பேருக்கு கண்புரை சத்திரசிகிச்சை!

## காத்திருப்பு பட்டியல் இன்றி முன்னெடுப்பதற்கு திட்டம் என்கிறார்வைத்திய நிபுணர் மலரவன்



வடமாகாணத்தில் காத்திருப்பு பட்டியல் இன்றி கண்புரை சத்திர சிகிச்சைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் , 10 நாட்களுக்கு 2ஆயிரம் கண்புரை சத்திர சிகிச்சைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் யாழ் . போதனா வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் எம். மலரவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச பார்வை தினத்தினை முன்னிட்டு , யாழ் . போதனா வைத்தியசாலை கண்ணியல் பிரிவில் 2ஆயிரம் பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சை செய்யவுள்ளோம்.

யாழ் போதனா வைத்தியசாலையில் குறுகிய காலத்தில் கண்புரை சத்திர சிகிச்சை முகாமை நடத்துவது இது மூன்றாவது தடவை. வடமாகாணத்தில் இது நாலாவது தடவையாகும்.

இலங்கையில் மாத்திரம் இன்றி , சார்க் வலய நாடுகளில் கூட "பேகோ" மூலம் இப்படியான சத்திர சிகிச்சை முகாம்கள் நடத்ததில்லை. வடக்கிலையே இவ்வாறான கண் புரை சத்திர சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

முதல் தடவை நாங்கள் 1200 சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டோம். அதுபோன்று கடந்த வருடம் இரத்தினபுரி வைத்தியசாலை நட்புறவு மன்றத்தின் ஏற்பாட்டில் "சர்வதேச பார்வைகள் தினம் - 2023" முன்னிட்டு ஐந்து நாட்களில் 1200 பேருக்கு சத்திர சிகிச்சை செய்தோம்

இந்த முறை யாழ்.போதனா வைத்தியசாலை கண்ணியல் பிரிவு , வடமாகாணத்தில் உள்ள ஏனைய கண்ணியல் பிரிவுடன் இணைந்து 2ஆயிரம் கண்புரை சத்திர சிகிச்சையை ஐந்து, ஐந்து நாட்களாக 10 நாட்களுக்குள் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்

கடந்த 2021ஆம் ஆண்டு முதல் தனியார் – அரசாங்க நட்புறவு உதவிகளுடன் அலாக்க பவுண்டேசன் (ALAKA FOUNDATION), ஆனந்தா பவுண்டேசன் (ANANDA FOUNDATION) மற்றும் அசிஸ்ட் ஆர்.ஆர் (யுளளளைவ சுசு) நிறுவனம் ஆகிவற்றின் உதவியுடன் இந்த கண்புரை சத்திர சிகிசிச்சையை மேற்கொண்டு வருகிறோம்.

கடந்த வருடம் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு சத்திர சிகிச்சை செய்துள்ளோம். இது வளர்ந்த நாடுகளுக்கு ஒப்பானது.

இந்த வருடம் இதுவரையிலான கால பகுதியில் யாழ் . போதனா வைத்தியசாலையில் மாத்திரம் 09 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்புரை சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளோம் கிளிநொச்சி . வவுனியாவில் 05 ஆயிரம் பேருக்கு செய்துள்ளோம்

வடமாகாணத்தில் இந்த வருடம் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்புரை சத்திர சிகிச்சையை மேற்கொள்ள திட்டமிட்டு இருந்தோம். ஆனால் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு செய்ய முடியும் என நம்புகிறோம்.

இதன் நிறைவு விழா எதிர்வரும் 25ஆம் திகதி வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் நடாத்தவுள்ளோம். அன்றைய தினம் ஆளுாநரால் இரண்டு பிரகடனங்கள் வெளியிடப்படவுள்ளது .

வடமாகாணத்தில் கண்புரை சத்திர சிகிச்சைக்கான காத்திருப்பு காலம் பூச்சியமாக பேணுவது. அதாவது சத்திர சிகிச்சைக்காக பதிந்தால் ஒரு வார கால பகுதிக்குள் சத்திர சிகிச்சையை மேற்கொள்ளல் ஆகும். அதொரு சிறப்பான விடயமாக அமையும்

யாழ்ப்பாணத்தில் கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் காத்திருப்பு 2 வருடங்களுக்கு மேலாக இருந்தது. சத்திர சிகிச்சைக்கு பதிந்தால் 2 வருடங்களின் பின்னரே சத்திர சிகிச்சை மேற்கொள்ள முடியும். சிலவேளைகளில் 4 வருடங்களுக்கு பின்னர் கூட சிலருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது

லண்டன் உள்ளிட்ட நாடுகளில் கூட காத்திருப்பு காலம் இன்றும் உள்ளது. காசு கட்டி செய்வதாக இருந்தாலும் கூட இந்த காத்திருப்பு காலம் உண்டு

இந்த நிலையில் தான் வடமாகாணத்தில் காத்திருப்பு காலம் இல்லாது பதிந்தால் உடனடியாக சத்திர சிகிச்சையை மேற்கொள்ள கூடியவாறு இருக்கும். எதிர்வரும் 25ஆம் திகதி முதல் செயற்படவுள்ளோம்.

அதேவேளை இரண்டாவது பிரகடனமாக அனைத்து ஆரம்ப சுகாதார பிரிவுகளிலும், வடமாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய சுகாதார திணைக்களத்தால் காத்திருப்பு காலம் இல்லாது உடனுக்கு உடன் கண்புரை சத்திர சிகிச்சையை செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கவுள்ளோம்

எனவே வடமாகாணத்தில் வசிக்கும் அனைத்து மக்கள் ஆகிய உங்களுக்கு கண்புரை இருக்கிறது அல்லது பார்வை குறைப்பாடுகள் இருப்பதாக உணர்ந்தால் அருகில் உள்ள ஆரம்ப சுகாதார வைத்திய நிலையத்திற்கோ அல்லது தள வைத்தியசாலைக்கோ அல்லது மாவட்ட வைத்திய சாலைக்கோ சென்று கண்களை பரிசோதித்து, கண்புரை சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் எனில் காத்திருப்பு காலம் இன்றி செய்ய கூடியவாறாக இருக்கும்" என்று வைத்திய நிபுணர் மலரவன் மேலும் தெரிவித்தார்.



## ஜெனிவா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தற்போதைய அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் நகல்வடிவை நிராகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் உள்நாட்டு பொறிமுறை மூலம் நல்லிணக்கம் உட்பட மனித உரிமை பிரச்சினைகளிற்கு தீர்வை காண்பது குறித்து அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என அவர் தெரிவித்துள்ளார். இலங்கை மனித உரிமை பேரவையுடனும், வழமையான மனித உரிமை பொறிமுறையுடனும், தொடர்ந்தும் ஒத்துழைப்பு அர்த்தபூர்வமான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கின்றது என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டுள்ளார். தேர்தலின் பின்னர் புதிய அரசாங்கம் தெரிவு செய்யப்படும் என்று தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான விஜித ஹேரத், நாங்கள் எங்கள் நிலைப்பாட்டை ஜெனீவாவிற்கு தெரியப்படுத்துவோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

"இந்த தீர்மானத்தில் உள்ள பல விடயங்களை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனினும் இதற்கு காலம் தேவை. நாளை ஜெனீவாவில் இந்த நிலைப்பாட்டை தெரியப்படுத்துவோம்" என்றும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

# சிறைச்சாலை அதிகாரி அதிரடியாகக் கைது

பூசா சிறைச்சாலைக்குள் மிகவும் சூட்சுமமான முறையில் கையடக்கத் தொலைபேசியின் துணைக் கருவிகளைக் கொண்டு செல்ல முயன்ற சிறைச்சாலை அதிகாரி ஒருவர் நேற்று பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேக நபரான சிறைச்சாலை அதிகாரியின் சீருடையில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கையடக்கத் தொலைபேசியின் சார்ஜர் மற்றும் டேட்டா கேபிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

# இணையம் மூலம் மோசடி 19 சீனப் பிரஜைகள் கைது

இணையம் ஊடாக மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடி தொடர்பில் 19 சீன பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் நாவல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.



# தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பங்கள்

## இன்று மட்டும் ஏற்கப்படும்

நடைபெற உள்ள தேர்தலுக்கான தபால் மூலம் வாக்களிப்புக்குரிய விண்ணப்பங்கள் இன்று இன்று நள்ளிரவு வரை ஏற்றுக்கொள்ளப்படும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இதுவரையில் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்காதவர்கள் தமது நிறுவனத்தின் தலைவர் ஊடாக இன்று நள்ளிரவுக்கு முன்னர் தின சமர்ப்பிக்கலாம் என தேர்தல் அணையாளர் தெரிவித்துள்ளார்.

# அம்பாறை தமிழரசில் வேட்பாளர்கள் தெரிவு

(வி.ரி.சகாதேவராஜா)

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் தெரிவு இடம்பெற்று வருகின்றது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான த. கலையரசன், க. கோடீஸ்வரன், முன்னாள் தவிசாளர் கி. ஜெயசிறில், சட்டமானி அ.நிதான்சன் , சட்டத்தரணி கே. ஜெயசுதன்,அதிபர் கே. ஜனார்த்தனன், சமூக செயற்பாட்டாளர்களான இந்தோனேஸ் , ரமேஷ்,, ரூபசாந்தன் ,கோபிகா இவ்வாறு சிலரின் பெயர்கள் கட்சிக்கு கிடைத்துள்ளன .

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கரையரசன் தலைமையிலான தெரிவுக் குழுவினர் இவர்களில் 10 பேரை தெரிவு செய்கின்ற செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

# கட்டுமரம் கடலில் கவிழ்ந்து மீனவர் ஒருவர் உயிரிழப்பு

யாழ். வடமராட்சி கடலில் கட்டுமரம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் கடற்றொழிலாளி ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார்.

தும்பளை லூதர் மாத கோயிலடியைச் சேர்ந்த திருச்செல்வம் ஞானப்பிரகாசம் (வயது 69) என்பவரே உயிரிழந்தார்.

தனது கட்டுமரத்தில் கடற்றொழிலுக்காக கடலுக்குள் சென்ற வேளை கட்டுமரம் கடலில் கவிழ்ந்ததில் அவர் கடலில் மூழ்கிச் சாவடைந்தார்.

சடலம் சக தொழிலாளிகளால் மீட்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது

# திருமலையில் ஆணின் சடலம் மீட்பு

திருகோணமலை, உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

திருகோணமலையைச் சேர்ந்த 45 வயதான அமரசிங்க ஆராச்சி லாகே சுமித் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# சர்வதேச ஆசிரியர் தின விழாவும் சேவை நலன் பாராட்டு விழாவும்







சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட அன்னமலை ஸ்ரீ சக்தி வித்யாலயத்தின் சர்வதேச ஆசிரியர் தினவிழாவும் சேவை நலன் பாராட்டு விழாவும் பாடசாலை அதிபர் பொன். பாரதிதாசன் தலைமையில் நேற்று திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் விபுலமாமணி வித்தகர் வி.ரி.சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார். சர்வதேச ஆசிரியர் தின விழாவில் சம்மாந்துறை வலயத்தில் 26 ஆண்டுகள் உதவிக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற வி.ரி.சகாதேவராஜாவிற்கான சேவை நலன் பாராட்டு விழாவும் இடம் பெற்றது. முன்னதாக மாணவர்கள் பெற்றோர்கள் இணைந்து பிரதம அதிதி மற்றும் அதிபர் ஆசிரியர்களை மாலை சூட்டி வரவேற்றார்கள்.

மாணவர்களின் கலை ஆற்றுகைகள் அங்கே பெற்றோர்களின் உதவியுடன் நிறைய வெளிப்பட்டது .

பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திருமதி காஞ்சனா சிவகாந்தன் தலைமையிலான பெற்றோர்கள் குழு முன்னெடுத்த இவ் விழாவில் பிரதமஅதிதி மற்றும் ஆசிரியர்கள் பாராட்டப்பட்டார்கள்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# கல்விக்கான சமூக ஒப்பந்தத்தை நோக்கி ஆசிரியர் குரல்களுக்கு மதிப்பளித்தல்





(நூருல் ஹுதா உமர்)

இவ் வருடத்தின் (2024) உலக ஆசிரியர் தின தொனிப்பொருளாக "கல்விக்கான புதிய சமூக ஒப்பந்தத்தை நோக்கி ஆசிரியர் குரல்களுக்கு மதிப்பளித்தல்" (Valuing teacher voices: towards a new social contract for education) எனும் தொனிப்பொருளின் கீழ் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) ஆசிரியர் தின நிகழ்வுகள் திங்கட்கிழமை, 07 அக்டோபர், 2024 கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் சேர் ராஸிக் பரீட் மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு மற்றும் பழைய மாணவிகள் சங்கத்தின் அனுசரணையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். சஹுத்துல் நஜீம் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) எம்.எச்.எம். ஜாபீர், விசேட அதிதியாக கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், கல்முனை சட்டத்தரணிகள் சங்க உப தலைவரும் மஹ்மூத் மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கத்தின் செயலாளருமான சிரேஷ்ட சட்டத்தரணி. ஆரிகா காரியப்பர், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் எஸ்.எல். அஸீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதிதிகள், ஆசிரியர்கள் மாலை மற்றும் சின்னம் அணிவித்து சாரணிய, முதலுதவி அணிவகுப்பு மரியாதையுடன் கலை கலாச்சார பாரம்பரிய நிகழ்வுகளுடன் மண்டபத்தை நோக்கி அழைத்துவரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. காலை வேளையில் மைதான விளையாட்டுகள், இரண்டாம் கட்டமாக மேடை நிகழ்வுகள் இடம்பெற்றன.

ஆசிரியர்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி, சங்கித கதிரை, மெதுவான மோட்ட சைக்கிள் ஓட்டம், மேடை நிகழ்ச்சிகள், பேச்சு, பாடல், கதை, என கலை கலாசார நிகழ்வுகள் இடம் பெற்றன.

ஆசிரியர்களின் கல்வி சேவையை பாராட்டி பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன. கல்முனை கல்வி வலயத்தின் கல்வி செயற்பாடுகளில் வினைத்திறன் மற்றும் அபிவிருத்தியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயலாற்றுகின்ற வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். சஹுதுல் நஜீம் மற்றும் நிர்வாகத்திற்கு பொறுப்பான பிரதி கல்வி பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபீர் ஆகியோர் சேவைகளை பாராட்டி பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதி அதிபர் ஹாஜியானி எஸ்.எஸ்.எம். சமதா மசூது லெவ்வை, ஏ.எச் நதிரா, உதவி அதிபர்களான என்.டி நதீகா, எம்.எஸ் மனூனா, பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள், பழைய மாணவிகள் சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள், கல்விசாரா ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.10.2024இல் வெளியிடப்பெற்றது.